**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.68/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.5 |
| பெயர் | சரவணன் | கிராமம் | |
| தந்தை பெயர் | கனகராஜ் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | திருச்சி |

Solemnly affirmed by Thiru.M.Ramesh, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 12.05.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சியில் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 24.02.2022 தேதியில் சம்மட்டிவிடுதி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தங்கராசு என்பவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் மேற்படி தங்கராசு கொடுத்த புகார் வாக்குமூலம் தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2. அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலையம் வந்து சம்மட்டிவிடுதி காவல் நிலைய குற்ற எண்.29/2022 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 307ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர்

முன்னிலையில் சமர்ப்பித்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலத்தை தங்கராஜ் என்பவரிடம் எத்தனை மணிக்கு பெற்றேன் என்று அந்த புகார் வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை. 24.02.2022 தேதியில் எத்தனை மணிக்கு எனக்கு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைக்கப்பெற்றது என்ற விபரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்று சொன்னாலும் அதை தொடர்ந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அதனால் தான் முதல் தகவல் அறிக்கையை நான் உரிய நேரத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சரவணன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.